பொது நிர்வாக சுற்றறிக்கை : 10/2012 (II)

எனது இல : CS/DOS/02/05/01
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07
2016-04-04

அனைத்து அமைச்சின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/பிரதேச செயலாளர்கள் மற்றும்
நிறுவனத் தலைவர்களிற்கு

<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பை நடைமுறைப்படுத்தல்</u>

மேற்படி விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2012-05-08 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றிக்கை 10/2012 மற்றும் 2012-06-21 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2012 (I) என்பவற்றை உமது அவதானத்திற்கு கொண்டு வருகிறேன்.

02. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைப்பிரமாணக் குறிப்பைப் பற்றிய முறையான தெளிவின்மை காரணமாக அச்சேவையில் உள்ளீர்க்கப்படுவதற்கு இதற்கு முன் விருப்பத்தினை வெளிப்படுத்தாத அலுவலர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்வதற்காக விருப்பத்தினை வெளிப்படுத்தும் இறுதித் திகதி 2016-05-31 ஆகும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்பிற்காக விருப்பத்தை வெளிப்படுத்திய அலுவலர்களது கோப்புகள் மற்றும் தேவையான ஆவணங்களை இல.10/2012 பொது நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் அறிவுரைகளிற்கேற்ப தயாரித்து 2016-06-30 இற்கு முன் கிடைக்குமாறு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

03. மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்வதற்கு விருப்பத்தை வெளிப்படுத்திய அலுவலர்களிற்கு, அக்கோரிக்கையை கேட்டு விலக்கிக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தை வழங்க முடியாது என்பதை தயவுடன் அறியத் தருகிறேன்.

04. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளீர்ப்பு செய்வதற்கு விருப்பத்தை வெளிப்படுத்திய அலுவலர்களை அச்சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யும் வரை இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவியொன்றிற்கு இடமாற்றம் செய்யும் சந்தர்ப்பத்தை வழங்க முடியுமென்பதால் அவ்வாறான கோரிக்கைகளை நிறுவனத் தலைவரின் சிபாரிசுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2016-12-31 ஆம் திகதி வரை அனுப்பி வைக்க முடியுமென்பதை அறியத் தருகிறேன்.

ஒப்பம்./ஜே. தடல்லகே
செயலாளர்
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு